[*1996 ஆகஸ்ட் 10*

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இரண்டு பொருள்கள் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருந்தேன். அந்த இரண்டையும் தலைவரவர்கள் நிராகரித்திருக்கின்றீர்கள். ஒன்று. இந்த ஜீவன்தாரா திட்டத்தின்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பை நிராகரிப்பது என் உரிமை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இல்லை, சார், நீங்கள் கொடுங்கள், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் முதலிலே, கவன ஈர்ப்பை நிராகரிப்பது என் உரிமை. நீங்கள் அதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருவது என்றால், அதை வேண்டுமானால் நீங்கள் பேசலாமே ஒழிய, கவன ஈர்ப்பை நீங்கள் நிராகரித்து விட்டீர்கள் என்றால், அது என் உரிமை. அதை நீங்கள் அவையிலே சொல்லக்கூடாது. பேசுங்கள்.

(ஆ) ஜீவன்தாரா திட்டக் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல் மற்றும் கொடைக்கானல், பண்ணைக்காடு பகுதிகளில் ஏற்பட்ட மலைச் சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு வீடு கட்டித் தருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். மாண்புமிகு தலைவரவர்களே, நாம் கிணறு வெட்டப் பணம் கொடுக்கிறோம். ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு 42,000 ரூபாய் கொடுக்கிறோம், 2 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு. அதேபோன்று, ஏழையாக இருக்கின்ற பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கின்றோம், இனாமாக. அப்படிக் கொடுக்கும்பொழுது இந்த ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் உடனடியாக நாம் மின்சார இணைப்பைக் கொடுக்கின்றோம். அதில் இன்னொரு ஆள் கிணறு வெட்டுகிறானே, அந்த ஏழை, அவனுக்கு இல்லை என்று நிராகரிக்கின்றோம். அதில் என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் தர்மசங்கடமான நிலைமை

1996 ஆகஸ்ட் 10] [கலைஞர் மு. கருணாநிதி]

இருக்கின்றன. சேர்ந்த பிறகும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் நிரம்ப இருக்கின்றன. *(சிரிப்பு)*

நான் முதலிலேயே சொன்னதை மீண்டும் நினைவுபடுத்தி காஸ்மாபாலிடன் கிளப்புக்குத்தான் அந்த நிலம் மீண்டும் குத்தகைக்குத் தரப்படும் என்று சொல்வதோடு, கோல்ஃப் விளையாட்டு--நாம் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு, இந்த அரசு இப்போது அங்கே இருக்கின்ற அந்த கோல்ஃப் விளையாட்டு--அமைப்புக்கு, அந்தச் சங்கத்திற்கு இடையூறு ஏற்படாமல் அவர்களோடு காஸ்மாபாலிடன் கிளப்பிலுள்ளவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த அவையிலே நான் வைத்து, என்னுடைய கருத்து விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து--தொடர்ச்சி

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தங்களிடம் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை தாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள முடியாது, கவன ஈர்ப்பாக வேண்டுமானால் எடுத்துக் கொள்கிறேன் என்று கூறியிருக்கிறீர்கள். அதிலே நான் கேட்டிருக்கிறேன். சேலம் மாவட்டத்திலே ஆத்தூரிலே அனைத்திந்திய.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள். ரொம்ப அமைதியாகப் பேசுகிறீர்கள். நானும் அமைதியாகப் பதில் சொல்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்ள முடியாது, கவன ஈர்ப்பாக எடுக்கிறேன் என்று சொன்னேன். கவன ஈர்ப்புக்கு 7 நாட்கள் கால அவகாசம் உண்டு. அந்த கால அவகாசத்தில் வரவில்லையென்றால் கேளுங்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம்: நான் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்தது சரி. நான் உங்களிடம் சொன்னது கவன ஈர்ப்பு.

திரு. பி. ஆர். சுந்தரம்: இது முக்கியமான பிரச்சினை. கட்சியைச் சேர்ந்தவர்கள் 125 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் சேலம் மத்திய சிறைச்சாலையிலே அடைத்திருக்கிறார்கள். 7(1) (ஏ) என்ற செக்ஷனிலே வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். மேலும் என்னுடைய ராசிபுரம் பகுதியிலே போலீசார் குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கேயிருந்து எனக்கு நேற்று இரவுகூட ஃபோன்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. என்ன காரணத்திற்காக அங்கே போலீசார் குவிக்கப்பட்டிருக்கிறார்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்பதையெல்லாம் நான் அனுமதிக்கமாட்டேன். குறிப்பிலிருந்து எடுக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் பேசுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் என் அறைக்கு வந்தபோது ¼ மணி நேரம் விளக்கம் உங்களுக்குக் கொடுத்தேன். 7(1)(ஏ) செக்ஷன் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். உங்கள் கட்சித் துணைத் தலைவர் திரு. தாமரைக்கனி அவர்களும் இருந்தார்கள். அப்போது நான் சொன்னேன், காவல் துறை குற்றத்தைப் பதிவு செய்யும்போது போடுகிற செக்ஷன், கட்டாயமாக, கடைசியாக வழக்கு போடுகிறபோது, வரவேண்டிய அவசியமில்லை என்று. ஆகையினால் இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுக்க முடியாது, சிறப்புக் கவன ஈர்ப்பாகவும் எடுக்க முடியாது, கவன ஈர்ப்பாக எடுத்து முதலமைச்சர் அலுவலகத்திற்கு அனுப்பி, பதிலைப் பெற்று உங்களை அழைக்கின்றேன் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, ஒழுங்குப் பிரச்சினை ஒன்றுமில்லை. (குறுக்கீடு) ஒரு நாளைக்கு ஒன்றுதான்.

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே, பிளசெண்ட் ஸ்டே பற்றி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிளசெண்ட் ஸ்டேவில் என்ன இருக்கிறது? நீங்கள் பிளசெண்டாகத்தான் இருக்கிறீர்கள், உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: நீங்கள் அனுமதி கொடுத்தால் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.